

இந்த நாள்

- பராபவ வருடம் ஆனி மாதம் 22-ம் நாள். திங்கட்கிழமை. தேய்பிறை.
- திதி: சஷ்டி பகல் 1.47 மணி வரை; அதன் பிறகு சப்தமி.
- நட்சத்திரம்: பூராட்டாதி காலை 6.51 மணி வரை அதன் பிறகு உத்திரட்டாதி.
- யோகம்: மரண யோகம். • சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர்.
- நல்ல நேரம்: காலை 6.15 - 7.15; மாலை 4.45 - 5.45 மணி வரை.
- ராகு காலம்: காலை 7.30 - 9.00 மணி வரை.
- எமகண்டம்: காலை 10.30 - 12.00 மணி வரை.
- சந்திராஷ்டமம்: மகம், பூரம்.

வானிலை

இன்று		நாளை	
அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
37 C / 98.6 F	27 C / 80.6 F	37 C / 98.6 F	27 C / 80.6 F

வறண்ட வானிலை காணப்படும்.

▶ திருச்சி உறையூர் சாலை ரோடு ஜெயந்தி பஸ்டாப் அருகே பெரிய தனியார் கட்டிடத்தில் கட்டபட்டிருந்த சாரம் சூறைக்காற்று வீசியதில் அறுந்து விழுந்து சாலையின் குறுக்கே அந்தரத்தில் தொங்குகிறது.

சாரம் சரிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு

உயிர்சேதம் தவிர்ப்பு

திருச்சி, ஜூலை 6: உறையூரில் சாரம் சரிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

திருச்சி மாநகரம் உறையூர் சாலைரோடு பகுதியில் தனியார் மருத்துவமனைக்கு சொந்தமான கட்டிடம் கட்டப்பட்டு வந்தது. கட்டுமான பணிக்காக மூங்கில்களைக் கொண்டு சாரம் கட்டப்பட்டு உள்ளது. சாரத்தில் ஏறி தினமும் பணியாளர்கள் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் நேற்று அங்கு கட்டப்பட்டிருந்த சாரம் திடீரென விழுந்தது. உறையூர் பிரதான சாலையில் அந்த சாரம் விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் அங்கு போக்குவரத்தை தடுத்து நிறுத்தி போக்குவரத்தை மாற்றி அனுப்பினர். அந்த சாரம் அங்கிருந்த மின் வயர்கள் விழுந்ததால் அவை அங்கு அறுந்து விழுந்தது. உடனடியாக அப்பகுதியில் மின் விநியோகமும் நிறுத்தப்பட்டது. சாலையில் விழுந்த சாரத்தை அப்புறப்படுத்தும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மேலும் சாரம் விழுந்த பொழுது வாகனங்களில் யாரும் அங்கு செல்லவில்லை. இதனால் அப்பகுதியில் பெரும் அசம்பாவித சம்பவம் தடுக்கப்பட்டது. இது குறித்து உறையூர் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

புளியமரம் முறிந்து தொழிலாளி படுகாயம்

முசிறி , ஜூலை 6: திருச்சி மாவட்டம், முசிறி அருகே செவந்தலிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் மாதேஸ்வரன் (37). செங்கல் சூளை தொழிலாளி. நேற்று மதியம் மாதேஸ்வரன் தனது டூவீலருடன் செவந்தலிங்கபுரம் சாலையில் நின்று கொண்டிருந்தார்.

அப்போது, எதிர்பாராத விதமாக பலத்த காற்று வீசியதில், சாலையோரம் இருந்த புளியமரம் வேரோடு சாய்ந்து மாதேஸ்வரன் மீது விழுந்தது. இதில் நிலைதடுமாறிய மாதேஸ்வரன், மரத்தின் கிளைகளுக்கு இடையே சிக்கி காலில் பலத்த காயமடைந்தார். அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த அக்கம் பக்கத்தினர், அவரை மீட்டு முசிறி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பாதிக்கப்பட்ட மாதேஸ்வரனுக்கு குணவதி என்ற மனைவியும், சர்வேஸ்வரன் (4) என்ற மகனும் உள்ளனர். இந்த விபத்து குறித்து முசிறி காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தாளக்குடியில்

ஆடு திருடிய 4 பேர் கைது

சமயபுரம், ஜூலை 6: நம்பர் ஒன் டோல்கேட் அருகே உள்ள தாளக்குடி ஊராட்சியைச்சேர்ந்தவர் இளவரசன். ஆடுகள் வளர்த்துவருகிறார்.

கடந்த சில நாட்களாக இவர் வளர்த்து வரும் ஆடுகள் தொடர்ந்து திருட்டு போனது. இதுகுறித்து அவர் கொள்ளிடம் போலீசில் பலமுறை புகார் அளித்திருந்தார். இளவரசன் வீடு மட்டுமன்றி, தாளக்குடி, கீரமங்கலம், பிச்சாண்டார் கோவில், பள்ளிவாசல் உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் கடந்த சில வாரங்களாகவே தொடர்ந்து ஆடுகள் திருடப்பட்டுவந்தன. இதனால் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் கடும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தனர்.

இதுகுறித்தும் கொள்ளிடம் காவல் நிலையத்தில் பொதுமக்கள் தரப்பில் தொடர்ந்து புகார்கள் அளிக்கப்பட்ட வண்ணம் இருந்தன. இந்நிலையில், நேற்று அப்பகுதியில் மீண்டும் ஆடு திருட முயன்ற 4 நபர்களை பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு கையும்களவுமாகப்பிடித்தனர். விசாரணையில் திருவானைக்காவல் பகுதியைச் சேர்ந்த அஜித் (19), நவீன் (21). இவர்களுடன் ஆடு திருட்டில் ஈடுபட்ட மேலும் இரண்டு நபர்கள் சிறுவர்கள் (சிறார்கள்) என்பது தெரியவந்தது. இப்பகுதிகளில் நடந்ததொடர் ஆடுதிருட்டுசம்பவங்களில் தங்களுக்குத் தொடர்பு இருப்பதையும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து, 4 பேரையும் கைதுசெய்துசிறுவர்கள்சீர்திருத்தபள்ளியிலும், அஜித், நவீனை மத்திய சிறையில் அடைத்தனர்.

மணப்பாறை அருகே

பெண் கடத்தல் வழக்கில் மேலும் ஒருவர் கைது

மணப்பாறை, ஜூலை 6: திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த சித்தாநத்தம் பகுதியினை சேர்ந்த அஜித்குமார் (27), மருங்காபுரி ஒன்றியம் முடுக்குப்பட்டியை சேர்ந்த சித்திரைவள்ளி (26) இருவரும் காதலித்து வந்த நிலையில், பெண் வீட்டில் சாதிய ரீதியான கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இதில் பெற்றோர்கள் சம்மதம் இல்லாமல் இருவரும் திருமணம் செய்துகொண்டனர். அதனைத்தொடர்ந்து பெண் வீட்டில் அளித்த புகாரின்பேரில் புத்தாநத்தம், மணப்பாறை போலீஸில் விசாரணை நடைபெற்று வந்தது. அதுபோல் நேற்று முன்தினம் புதுமண தம்பதினர் விசாரணைக்கு ஆஜராகிய நிலையில், எதிர் தரப்பில் யாரும் வரவில்லை. அதனால் தம்பதியினர் ஆட்டோவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது, காரில் பின் தொடர்ந்த பெண் உறவினர்கள் ஆட்டோவை வழிமறித்து பெண்ணை கடத்தி சென்றனர்.

▶ அமானுல்லா

புகாரின் பேரில் பெண்ணை மீட்டு கணவருடன் சேர்த்து வந்த மணப்பாறை போலீஸார், சித்திரைவள்ளி அளித்த புகாரின்பேரில் அவரது உறவினர்களான காட்டுப்பட்டி காமராஜர் நகரை சேர்ந்த பழனிச்சாமி மகன் முருகேசன் (38), பிரகாஷ் (28) மற்றும் முடுக்குப்பட்டியை சேர்ந்த மலையாண்டி மகன் மலைச்சாமி (29) ஆகிய 3 பேரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி சிறையிலடைத்தனர். இந்நிலையில் பெண் கடத்தலின்போது உதவி செய்ததாக புத்தாநத்தம் கிழக்கு தெருவை சேர்ந்த நாகூர்கனி மகன் அமானுல்லா (எ) மாலா (44) என்பரை நேற்று மணப்பாறை போலீஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி சிறையிலடைத்தனர்.

காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் முன்கூட்டியே துவங்குகிறது

ஆடி துவங்கும் முன்பே ஆரம்பமாயிடுச்சி...

பலத்த காற்றால் வாகன ஓட்டிகள் கடும் அவதி

திருச்சி, ஜூலை 6: 'ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்' என்பது தமிழர்களின் அனுபவ அறிவால் ஏற்பட்ட புகழ்பெற்ற பழமொழி. ஆடி காற்றின் வலிமையை இப்பழமொழி விளக்க இன்றளவும் பொருத்தமானதாய் உள்ளது. இருப்பினும் நம் அனைவர் மனதிலும் ஒரு பொதுவான கேள்வி உள்ளது. ஆடி மாதம் தொடங்குவதற்கு முன்பே, குறிப்பாக ஜூலை முதல் வாரத்திலேயே ஏன் ஆடிக் காற்றை போல காற்ற பலமாக வீசுகிறது? என்பதே அது. இதற்கான விடையை வானிலை அறிவியல் தெளிவாக விளக்குகிறது.

ஆடிக் காற்று என்றால் என்ன?: தமிழ் மாதமான ஆடி (பொதுவாக ஜூலை 16 முதல் ஆகஸ்ட் 16 வரை) காலத்தில் தமிழ்நாட்டு முழுவதும், குறிப்பாக மேற்கு மற்றும் மத்திய மாவட்டங்களில் தொடர்ந்து பலமாய் வீசும் காற்றே 'ஆடிக் காற்று' ஆகும். இது தனித்து உருவாகும் காற்றல்ல, தென்மேற்குப் பருவ மழை காற்றின் ஒரு பகுதியாகும்.

ஜூலை 1ம் தேதியில் இருந்தே ஆடிக்காற்று வீசுவதேன்?: ஆடிக் காற்று என்பது தமிழ் காலண்டரை அடிப்படையாக கொண்டு உருவாகும் இயற்கை நிகழ்வல்ல. அது வானிலை அமைப்பை பொறுத்தது. தென்மேற்கு பருவமழை ஜூன் மாதத்தில் துவங்குகிறது. இந்தியாவில் தென்மேற்கு பருவ மழை பொதுவாக ஜூன் முதல் வாரத்தில் துவங்கி, ஜூன் இறுதிக்குள் தென்னிந்தியாவின் பெரும்பாலான பகுதிகளுக்கு செல்கிறது. ஜூலை முதல் வாரத்தில் அது மேலும் வலுப்பெறுகிறது. இதனால் ஆடி மாதம் துவங்குதற்கு முன்பே தமிழ்நாட்டில் பலத்த காற்று வீச ஆரம்பிக்கிறது.

இதற்கு காற்றழுத்தத்தில் ஏற்படும் மாறுபாடே காரணம். கோடைக்காலத்தில் வட இந்தியாவில் நிலப்பரப்பு மிகவும் வெப்பமடைவதால் அங்கு குறைந்த காற்றழுத்தம் உருவாகிறது. அதே நேரத்தில் இந்தியப்பெருங்கடல் மற்றும் அரபிக்கடல் பகுதியில் ஒப்பீட்டளவில் அதிக காற்றழுத்தம் நிலவுகிறது. இந்த காற்றழுத்த வேறுபாடு காரணமாக கடலில் இருந்து நிலப்பரப்பை நோக்கி பலத்த காற்று வீசுகிறது.

மேற்கு தொடர்ச்சி மலை மீது மோதும் தென்மேற்கு பருவமழைக் காற்று, கேரளா மற்றும் கர்நாடகத்தில் அதிக மழையைப் பொழிகிறது. பின்னர் அந்த மலைத்தொடரைக் கடந்து தமிழ்நாட்டிற்குள் நுழையும் போது மழை குறைந்தாலும், காற்றின் வேகம் அதிகமாக தொடர்கிறது. இதனால் தமிழகத்தில் ஆடிக் காற்றின் தாக்கம் முன்னதாகவே அதிகமாக உணரப்படுகிறது.

சில ஆண்டுகளில் தென்மேற்குப் பருவமழை மிகவும் வலுவாக இருக்கும். மேலும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அல்லது பருவமழை சுழற்சி உருவாகும் போது, ஜூலை முதல் வாரத்திலேயே ஆடிக்காற்றை போன்ற பலத்த காற்று வீசும். இதனால் ஜூலை 1ம் தேதியிலேயே பலத்த காற்று வீசுவது இயற்கைக்கு மாறானது அல்ல.

ஆடிக் காற்றின் தன்மைகள்:

தொடர்ந்து பல நாட்கள் இடைவிடாமல் வீசும். மணிக்கு 40 முதல் 70 கி.மீ. அல்லது சில நேரங்களில் அதற்கும் மேலும் வீசலாம். மாலை மற்றும் இரவு நேரங்களில் காற்றின் வேகம் அதிகமாக இருக்கும். மேற்கு அல்லது தென்மேற்கு திசையில் இருந்து வீசும். சில பகுதிகளில் வறண்ட தன்மையுடனும், சில இடங்களில் ஈரப்பதத்துடனும் காணப்படும்.

எங்கெங்கு அதிகமாக வீசும்: தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கரூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் இந்தக்காற்றின் தாக்கம் அதிகமாக இருக்கும்.

▶ கிளிக்கூடு பகுதியில் ஆலமரக்கிளை முறிந்து விழுந்தது.

காற்றாலை மின் உற்பத்தி அதிகரிக்கும். தமிழ்நாட்டிலுள்ள காற்றாலை மின் நிலையங்கள் ஆடி மாதத்தில் முழுத்திறனுடன் இயங்கி அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. ஆடிக்காற்று வீசத்துவங்கியதும் வெப்பநிலை குறையும். கோடைக்கால வெப்பம் தணிந்து, இயற்கையான குளிர்ச்சியான சூழல் உருவாகிறது.

விவசாயத்திற்கு நன்மை அளிக்கும். சில பயிர்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுகிறது. வயல்களில் அதிக வெப்பம் குறைவதால் தாவரங்கள் சீராக வளர உதவுகிறது. வீடுகள், கிடங்குகள் மற்றும் தொழிற்சாலைகளில் இயற்கையான காற்றோட்டம் அதிகரிக்கும். வேகமாக தொடர்ச்சியாக வீசும் காற்றால் நகரப்புறங்களில் காற்றிலுள்ள மாசு சிதறி செல்ல உதவுகிறது. காற்று மண்டலத்தில் தூசி அதிகரிப்பதால் ஒவ்வாமை ஏற்படலாம். கண் எரிச்சல், சளி, இருமல் போன்றவை அதிகரிக்கலாம். குழந்தைகள், முதியோர் மற்றும் சுவாசப்பிரச்சினை உள்ளவர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

'ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்' என்ற பழமொழி, ஆடி மாதத்தில் வீசும் காற்றின் வலிமையை விளக்குகிறது. மேலும் கனமான அம்மிக்கல்லையே நகர்த்தும் அளவுக்கு காற்று பலமாக வீசும் என்பதையே இந்தப்பழமொழி உணர்த்துகிறது. இயற்கையை நுணுக்கமாக கவனித்த தமிழர்களின் அனுபவ அறிவுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஆடிக் காற்று என்பது தமிழ் மாதத்தால் உருவாகும் காற்று அல்ல, தென்மேற்கு பருவமழையால் உருவாகும் இயற்கை வானிலை நிகழ்வாகும். அதனால், ஆடி மாதம் தொடங்குவதற்கு முன்பே, குறிப்பாக ஜூலை முதல் வாரத்திலேயே பலத்த காற்று வீசுவது முற்றிலும் இயல்பான ஒன்றே. ஒருபுறம் காற்றாலை மின் உற்பத்தி, வெப்பநிலை குறைவு, இயற்கைக் காற்றோட்டம் போன்ற பல நன்மைகளை வழங்கும் இந்தக்காற்று, மறுபுறம் விவசாயம், மீன்பிடித் தொழில், போக்குவரத்து, மின்விநியோகம் மற்றும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையிலும் சில சவால்களை ஏற்படுத்துகிறது என்பதையும் மறுக்க இயலாது.

எனவே, ஆடிக் காற்றின் இயல்பை புரிந்துகொண்டு, அதற்கேற்ற முன்னெச்சரிக்கை நம் நடவடிக்கைகளை மேற்கொள்வது நமக்கும் பாதுகாப்பு.

திருச்சி மாவட்டத்தில்

போதை மாத்திரை விற்ற 9 பேர் கைது

திருச்சி, ஜூலை 6: திருச்சி மாவட்டத்தில் போதை மாத்திரை விற்ற 9 பேரை போலீசார் கைது செய்தனர்.

திருச்சி பொன்மலை, அரியமங்கலம், கோட்டை, காந்திமார்க்கெட் பகுதியில் போதை மாத்திரைகள் விற்கப்படுவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலின்பேரில் ஜூலை 4ம் தேதி போலீசார் அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது பொன்மலைப்பட்டி சாய்பாபா கோவில் அருகே போதை மாத்திரைகள் விற்ற பொன்மலைப்பட்டியை சேர்ந்த செல்வராஜ் (24), விக்னேஷ் (23), சுரேஷ் (32) ஆகிய 3 பேரை பொன்மலை போலீசார் கைது செய்தனர்.

அரியமங்கலம் பகுதியில் போதை மாத்திரை விற்ற வடக்கு காட்டூர் கண்ணதாசன் தெருவைச் சேர்ந்த ரவுடி முத்துமணி (28) என்பவரை அரியமங்கலம் போலீசார் கைது செய்தனர். மேலும் மேலசிந்தாமணி திருமண மண்டபம் அருகே போதை மாத்திரை விற்ற மேலசிந்தாமணி நடுத்தெருவைச் சேர்ந்த ஆனந்த் (24) என்பவரை கோட்டை போலீசார் கைது செய்தனர். மேலும் ஜெயில்பேட்டை பகுதியில் போதை மாத்திரை விற்ற அதே பகுதியை சேர்ந்த வினோத் (25) என்பவரை காந்திமார்க்கெட் போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 60 போதை மாத்திரைகளை பறிமுதல் செய்தனர்.

திருச்சி உறையூர் பகுதியில் போதை மாத்திரைகள் விற்கப்படுவதாக உறையூர் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலின்பேரில் ஜூலை 5ம் தேதி போலீசார் அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது நாச்சியார் கோவில் அருகே போதை மாத்திரை விற்ற உறையூர் பாண்டமங்கலம் முஸ்லிம் தெருவைச் சேர்ந்த உசேன் பாட்ஷா (27), முகமது இர்பான் (22) மற்றும் கோணக்கரை சாலை அருகே போதை மாத்திரை விற்ற சமயபுரம் சக்திநகரைச் சேர்ந்த குரு (25) ஆகிய 3 பேரை உறையூர் போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 233 போதை மாத்திரைகள், ஊசி, 1 கார், 4 செல்போன், ரூ.1000 பணம், ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

சிறப்பு டெட் இரண்டாம் தாள் தேர்வு

திருச்சியில் 6,757 ஆசிரியர்கள் எழுதினர்

244 பேர் ஆப்சென்ட்

திருச்சி, ஜூலை 6: திருச்சி மாவட்டத்தில் டெட் இரண்டாம் தாளை 6 ஆயிரத்து 757 பேர் எழுதினர். 244 பேர் எழுதவில்லை. கே.கே.நகரில் தனியார் பள்ளியில் நடைபெற்ற தேர்வை கலெக்டர் ஆய்வு செய்தார்.

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் சார்பில் நேற்று பட்டதாரி ஆசிரியர்களுக்கான டெட் இரண்டாம் தாள் தேர்வு நடைபெற்றது. திருச்சி மாவட்டத்தில் தேர்வினை மொத்தம் 7 ஆயிரத்து 01 ஆசிரியர்கள் எழுத இருந்தனர். திருச்சி மாவட்டத்தில் 25 மையங்களில் தேர்வு நேற்று நடைபெற்றது. இதில் 132 மாற்றுத்திறன் ஆசிரியர்களும், 25 ஆசிரியர்களுக்கு சொல்வதை எழுதும் உதவியாளர்கள் (ஸ்க்ரைப்) தேவைப்பட்டது. இந்நிலையில் நேற்று நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வை திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 6 ஆயிரத்து 757 பேர் எழுதினர். 244 பேர் எழுதவில்லை. திருச்சி கே.கே.நகர் ஜகன்மாதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற தேர்வை திருச்சி மாவட்ட கலெக்டர் பிரத்திக் தாயள் பார்வையிட்டார்.

▶ திருச்சி மாநகராட்சி அலுவலகம் எதிரோ உள்ள தனியார் பள்ளியில் டெட் இரண்டாம் தாள் தேர்வு எழுத வந்த ஆசிரியைகளை போலீசார் சோதனை செய்தனர்.

தேர்வர்கள் தேர்வெழுத ஏதுவான சூழ்நிலை, தேர்வறைக்கு வர தேவையான போக்குவரத்து வசதி போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி தலைமையில் கண்காணிப்பு குழு மற்றும் பறக்கும் படை அமைக்கப்பட்டிருந்தது. பள்ளிக்கல்வித் துறை சார்பாக கண்காணிப்பு அலுவலராக பள்ளிக்கல்வித்துறை இணை இயக்குனர் (மேல்நிலைக்கல்வி) அரசுத்தேர்வுகள் மற்றும் முதன்மை கல்வி அலுவலர் தலைமையில் 5 மாவட்டக் கல்வி அலுவலர்கள் இணைந்து அனைத்து தேர்வு மையங்களிலும் தேர்வு பணியில் ஈடுபட்டனர். நிலையான படை உறுப்பினராக ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் இரு ஆசிரியர்கள் என மொத்தம் 550 தலைமையாசிரியர்கள், முதுகலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

க்ரிஹும் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரீனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி-620 017 தமிழ்நாடு.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை **எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்–ஏலம் மூலமாக 06.08.2026 தேதியன்று** விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும்.

விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((இர்ணய விலையில் 10%)(F)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்து விக்கங்கங்கள் / நிர்மாற் வழக்குகள் தெரிந்து ஏதேனும் (K)
1	கடன் எண்: HF0597H21100013 ரேகா (கடன்தாரர்), ராஜேஷ் சின்னய்யா (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 07.06.2025 மொத்த நிலுவைத் தொகை: 07.06.2025 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.11,14,921/- (ரூபாய் பதினொரு லட்சத்து பதினான்காயிரத்து, தொள்ளாயிரத்து இருபத்தொன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 18.35% வட்டி.	கையக	புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், கந்தர்வகோட்டை சார் பதிவு மாவட்டம், குளத்தூர் தாலுகா, மின்னத்தூர் வட்டம், நத்தம் பட்டா எண்.89, நத்தம் பழைய சர்வே எண்.597/1 பகுதி. நத்தம் புதிய சர்வே எண்.799/6 இல் 565 ச.அடி பரப்பளவு உள்ள சொத்து. அதன் நான்கு எல்லைகள்: கிழக்கில்: மாங்குடியார் கோயில் மற்றும் ராஜேஷ் சொத்து, மேற்கில்: முனியாண்டவர் கோயில் சொத்து மற்றும் சின்னய்யா சொத்து, வடக்கில்: சாலை, தெற்கில்: கிழக்கு மேற்கு சாலை. இந்த நான்கெல்லைகளுக்குள் 565 ச.அடி அல்லது 141.25 ச.மீட்டர்கள் பரப்பளவு உள்ள சொத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் அதனுடன் மின்சார வாரிய சர்வீஸ் இணைப்பு மற்றும் அதற்கு உரிய வைப்புத் தொகை மற்றும் அனைத்து நடைபாதை, பயன்பாட்டு உரிமைகள் அடங்கிய சொத்து.	Rs. 1514993.00/- (ரூபாய் பதினைந்து லட்சத்து பதினான்காயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று மூன்று மட்டும்)	Rs. 151499.30/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தொரு ஆயிரத்து நானூற்று தொன்னூற்று ஒன்பது மற்றும் பைசா மூப்பது மட்டும்)	05-08-2026 Before 5 PM	10,000/-	22-07-2026 (11AM – 4PM)	06-08-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்சர்சில் டெக்னிகல் பார்க், கணபதி செளக் அருகில், 43/44, வீமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 05.08.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை அவற்றின் மூல பிரதியை முகவரி: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி–620 017(கு.நா), மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soudararajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெர